1984 மார்ச் 7]

**மருங்காபுரி ஒன்றியப் பகுதியில் ஆய்விலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள்.**

205— (*வினா எண் 19125)— திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டம் மருங்காபுரி ஒன்றியத்தில் ஆய்வில் இருந்து வருகிற நீர்ப்பாசனத் திட்டங்கள் என்ன ?

(ஆ) கடந்த 10 ஆண்டுகளாக மேற்படி ஒன்றியத்தில் புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எவையேனும் நிறைவேற்றப் பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) திருச்சிராப் பள்ளி மாவட்டம் மணப்பாறை வட்டம், செஞ்சநாயக்கன்பட்டி கிராமம், செட்டிவாரியில் ரூபாய் 39 இலட்ச மதிப்பீட்டில் ஒரு கண்மாய் அமைக்கும் திட்டமும், துவரங்குறிச்சிக்கருகே நல்லூர் கிராமம் காட்டுவாரியின் குறுக்கே ரூ 7·99 இலட்சம் மதிப் பீட்டில் ஒரு கண்மாய் அமைக்கும் திட்டமும் தலைமைப் பொறி யாளர் (ஆய்வு) அவர்களின் பரிசீலனையில் உள்ளன.

(ஆ) இல்லை.

திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்தத் திட்டம் நீண்ட காலமாக ஆய்வில் இருக்கிறது. அங்கே நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தும் பொருட்டு, அந்த வேலைகளைத் துரிதமாக செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இப்போதுதான் இந்தத் திட்டம் ஆய்வில் உள்ளது. அந்த ஆய்வு நிலை முடிவடையும் தருவாயில் இருக்கிறது. ஆய்வு முடிந்த வுடன், மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றும் ரெவின்யூ அதி காரிகளுடைய அனுமதி பெற வேண்டும். அதற்குப் பிறகுதான், அவர்கள் பரிந்துரை செய்த பிறகுதான், அரசின் ஒப்புதலுக்கு வரும். அதற்குப் பிறகுதான், அதைப் பற்றி என்ன நட வடிக்கை எடுக்க முடியும் என்பதைச் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.